## August 9, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. காங்கோ குடியரசின் வடக்கு கிவு பகுதியில் ருவாண்டா ஆதரவு பெற்ற எம்23 கிளர்ச்சிப் படையினர் முன்னேற்றம் கண்டுவருவதால் அங்கு மோதல் வலுத்துள்ளது. அதையடுத்து, ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறிவருகின்றனர்.
2. அஜர்பைஜானிடமிருந்து மாசு கலந்த கச்சா எண்ணெய் வாங் கப்படுவதால் தங்களது சுத்திகரிப்பு இயந்திரங்கள் பழுதடை வதாகவும், சுற்றுச்சூழல் அவசரநிலை ஏற்பட்டுள்ளதாகவும் ருமேனியா எரிசக்தித் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
3. ஹைட்டியில் அமைக்கப்பட்டுள்ள இடைக்கால அரசின் அதிபராக லாரன்ட் செயின்ட் கிர் நியமிக்கப்பட்டுள்ளார்.
4. வரும் 2030-க்குள் நிலவில் அணுமின் நிலையம் அமைக்கும் திட்டத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா விரைவுபடுத்த உள்ளதாக அந்த நாட்டு டைகங்கள் தெரிவிக்கின்றன. இது, நிலவில் மனிதர்கள் நிரந்தரமாக வாழும் தளத்தை உருவாக்கும் அமெரிக்காவின் லட்சியத்தில் ஒரு பகுதியாகும்.
5. காஸா சிட்டியை கைப்பற்ற இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரவையின் கூட்டத்தில் ஒருமனதாக முடிவு எடுக்கப்பட்டது. இதற்கிடையே, இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியை ஜெர்மனி தற்காலிகமாக நிறுத்துவதாக அறிவித்தது. இஸ்ரேலின் பாதுகாப்பு இறக்குமதியில் சுமார் 30 சதவீதத்தை, குறிப்பாக கப்பல்களில் பயன் படுத்தப்படும் என்ஜின்களை வழங்கும் ஜெர்மனி, காஸாவில் இஸ்ரேலின் நடவடிக்கையைக் கண்டித்து இந்தமுடிவை எடுத்துள்ளது.
6. இந்திய மீதான இறக்குமதி இவரியை 50 சதவீதமாக அமெரிக்கா உயர்த்தியிருப்பது தமிழ்நாட்டை நேரடியாகப் பாதிக்கும் என்பதால் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த ஜவுளித் தொழில்முனைவோர் அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கின்றனர். அமெரிக்காவுக்கு இந்தியா சுமார் 11 பில்லியன் டாலர் மதிப்பிலான ஜவுளி ஆடைகளை ஏற்றுமதி செய்கிறது. இது இந்தியாவின் மொத்த ஆடை ஏற்றுமதியில் 30 சதவீதமாகும். தற்போதைய நிலையில், அமெரிக்க சந்தைக்கு இந்தியா ஏற்றுமதி செய்யும் வீட்டு உபயோக ஜவுளிக்கு 9.6 சதவீத வரியும், ஆயத்த ஆடைகளுக்கு 16 சதவீத வரியும் விதிக்கப்படுகிறது. அந்நாட்டுக்கான மொத்த ஆடை ஏற்றுமதியில் ஆயத்த ஆடைகளின் பங்கு 60 சதவீதமாக இருக்கும் நிலையில், அதில் தமிழ்நாட்டின் பங்களிப்பு மட்டும் சுமார் 60 சதவீதம்
7. சீனாவில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு சிக்குன்குனியா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தங்கள் குடிமக்களுக்கு அமெரிக்க தொற்று நோய் தடுப்பு அமைப்பு பயணஎச்சரிக்கை விடுத்துள்ளது.
8. இந்தியாவின் ஒட்டுமொத்த பயணிகள் வாகனச் சந்தையில் மின்சார வாகனங்களின் பங்கு 3 சதவீதத்தை எட்டியுள்ளது.

9. தமிழக பள்ளிக் கல்விக்கான மாநில கல்விக் கொள்கை 2025-ஐ தமிழக முதல்வர் சென்னையில் வெளியிட்டார். அதில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்களின் விவரம் :-
   - 8-ஆம் வகுப்பு வரை கட்டாயி தேர்ச்சி
   - மதிப்பீட்டுச் சீர்திருத்தம்
   - பாடப் புத்தகங்கள் மாற்றம்
   - உடற்கல்வி கட்டாயம்
   - பள்ளி உள்கட்டமைப்பு
   - சமூகப் பங்கேற்புத் திட்டங்கள்
   - குறைதீர் கற்பித்தல்-நூலக பயன்பாடு!
   - ஸ்லாஸ் தேர்வு
   - எண்ம முறையிலான கல்வி
   - ஆசிரியர் திறன் மேம்பாடு

10. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**

    i. நிக்கோலஸ் மடுரோவைக் - வெனிசுலா அதிபர்.
    ii. விக்டோரியா எம்போகோ - கனடா டென்னிஸ் வீராங்கனை
    iii. பென் ஷெல்டன் – அமெரிக்காவின் டென்னிஸ் வீரர்